V

**தமிழ்**

# சிறுபஞ்சமூலம்

I.**சரியான விடையைத் தேர்வு செய்க**.

1. பின்வருவனவற்றுள் வனப்பு என்னும் சொல்லின் பொருள் தராத சொல்

   அ) அழகு ஆ) எழில் இ) அருவி ஈ) கவின்
2. கண்ணுக்கு வனப்பு எது?

   அ) குளிர்ச்சி ஆ) கண்மை இ) கண்ணாடி ஈ) இரக்கம்
3. கேட்டவர்கள் நன்று எனச் சொல்லும் வனப்பு எது?

   அ) பாடல் ஆ) உரையாடல் இ) சொற்பொழிவு ஈ) செய்தி
4. பின்வருவனவற்றுள் அரசனைக் குறிக்கும் சொல் எது?

   அ) தந்தை ஆ) கோ இ) தனயன் ஈ) நீதிபதி
5. கண் ஓட்டம் – இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

   அ) கண்ஓட்டம் ஆ) கண்ணோடம்

   இ) கண்ணோட்டம் ஈ) கண்ணேட்டம்
6. நன்றென்றல் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) நன் + றென்றல் ஆ) நன்றே + என்றல்

   இ) நன்று + றென்றல் ஈ) நன்று + என்றல்
7. உரைத்தல் என்னும் பொருள் தராத சொல்

   அ) கேட்டல் ஆ) பேசுதல் இ) பகர்தல் ஈ) மொழிதல்
8. தன் + நாடு – இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

   அ) தன்நாடு ஆ) தன்னாடு இ) தந்நாடு ஈ) தம்நாடு
9. சிறுபஞ்சமூலம் என்பதில் ஐந்து என்ற எண்ணைக் குறிக்கும் சொல்

   அ) சிறு ஆ) பலம் இ) பஞ்ச ஈ) மூலம்
10. பின்வருவனவற்றுள் எது சிறுபஞ்சமூலம் குறிப்பிடும் மூலிகை இல்லை?

    அ) சிறுமல்லி ஆ) பெருமல்லி இ) நெருஞ்சி ஈ) கடுகு

LIVEWORKSHEETS